## சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்துக்கு

# ‘தேசிய திட்ட சிறப்பு விருது’

சென்னை, ஆக.22–

சென்னையில் முதல் கட்டமாக 45 கிலோ மீட்டர் தூரத்துக்கான மெட்ரோ ரெயில் சேவைக்கான பணிகள் நிறைவடைந்து வெற்றிகரமாக போக்குவரத்து தொடங்கப்பட்டு உள்ளது. இதில் திறமையான பொறியியல் நடைமுறைகள், சவாலான பணி, பாதுகாப்புக்கு முன்னுரிமை அளிப்பது போன்றவற்றை பாராட்டி, இந்தியாவை நவீனமயமாக்குவதற்கான தேசிய நிறுவனத்தின் முதன்மை செயல் அதிகாரி அமிதாப் காந்த், சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்திற்கு ‘தேசிய திட்ட சிறப்பு விருதை’ முதன்மை பொதுமேலாளர் (சுரங்கம்) அரவிந்த்குமார் ராயிடம் வழங்கினார். இந்த விழாவில் மெட்ரோ மேன் டாக்டர் இ.ஸ்ரீதரன், பிரம்மோஸ் விண்வெளி நிறுவனர் மற்றும் தலைவர் டாக்டர் ஏ.சிவதாணு பிள்ளை, எல்.அண்ட்.டி தலைமை நிர்வாக அதிகாரி எஸ்.என்.சுப்பிரமணியன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.